# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

மனு எண் : 1136 / 2016 / ந

ஆணை எண் 109 / 2017

நாள் :05/05/2017

திரு.க.மருதையா,
102, முல்லை நகர்,
சங்கரன் கோவில்,
திருநெல்வேலி மாவட்டம் - 627 756.
..... முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
கடையநல்லூர் நகராட்சி,
மற்றும் பிறர்.
..... எதிர் மனுதாரர்

ஆணை:-

முறையீட்டு மனுதாரரது, 05.11.2016 நாளிட்ட முறையீட்டு மனு 09.11.2016 அன்று இம்முறை மன்ற நடுவத்திற்கு வரப்பெற்றது. இம்முறை மன்ற நடுவ அறிவிப்பு கடித எண்:1136/16/ந நாள்:10.11.2016 ல், 2015 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் (முறையீடு தாக்கல், விசாரணை மற்றும் தீர்வு செய்யப்படுதல் முறைகள்) விதிகள், விதி 5 ன்படி எதிர்மனுதாரர்களின் எண்ணிக்கைக்கேற்ப அதே எண்ணிக்கையிலான நகல்கள் இணைப்புகளுடன் தாக்கல் செய்யப்படவேண்டுமென மனுதாரருக்குத் தெரிவிக்கப்பட்டது. அதன்படி முறையீட்டு மனுதாரரது 19.11.2016 கடிதத்துடன் முறையீட்டு மனுக்களின் நகல்கள் வரப்பெற்றன.

முறையீட்டு மனுவில், கடையநல்லூர் நகராட்சிக்குட்பட்ட கிருஷ்ணாபுரம் கிராமம், கருப்பாநதி ரோட்டில் சர்வே எண்.1027/1,2ல் I அக்குவா என்ற மினரல் வாட்டர் தொழிற்சாலை அரசு விதிக்குப்புறம்பாக நகராட்சி ஆணையர், துப்புரவு ஆய்வர் மற்றும் தொழிற்சாலை உரிமையாளர்

ஆகியோரது ஊழல், கூட்டுச்சதி, கூட்டு மோசடி மூலம் செயல்படுகிறதென புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2011-12 ல் நகராட்சி அனுமதி வழங்கியதாகவும், பின்னர் விதிகளுக்கு புறம்பாக விளை நிலங்களுக்கு மத்தியில் இந்த மினரல் வாட்டர் தொழிற்சாலை அமைந்துள்ளதென்பதால் தென்காசி கோட்டாட்சித் தலைவரது பரிந்துரையின்படி தொழிற்சாலை உரிமம் ரத்து செய்யப்பட்டதெனவும் மீண்டும் விதிகளுக்குப் புறம்பாக 15.06.2016 ல் நகராட்சியால் மேற்படி தொழிற்சாலைக்கு அனுமதி அளிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விவசாய மண்டலமாக இருந்த ஒரு பகுதியை ஒரு குறிப்பிட்ட தொழிற்சாலைக்காக பொது தொழிற்சாலை மண்டலமாக மாற்றி அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது குறித்தும் மேற்படி மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசாணைப்படி மினரல் வாட்டர் தயாரிக்க எடுக்கப்படும் தண்ணீருக்கான கிணறு அல்லது ஆழ்துளை கிணற்றுக்கும் சுற்றியுள்ள கிணறுகளுக்குமிடையே உள்ள இடைவெளி நிர்ணயிக்கப்பட்ட அளவினைவிட (375 மீட்டருக்கு மேல்) மிக குறைவாகவே உள்ளது என்றும் மேற்படி தொழிற்சாலை கட்டடம் கருப்பாநதி பாசன பெருங்கால்வாயின் வடபுறம் கால்வாயை ஒட்டியே அமைந்துள்ளதெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலை விளைநிலங்களுக்கு மத்தியில் அமைந்துள்ளதால் சுற்றியுள்ள கிணறுகளில் நீர் வரத்து குறைந்துள்ளதெனவும் ஊழல் அதிகாரிகளே இதற்கு பொறுப்பு எனவும் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து இம்முறை மன்ற நடுவ அறிவிப்பாணை மு.ம.எண்:1136/2016/ந நாள்: 22.11.2016 ன் ன் படி நகராட்சி ஆணையரது அறிக்கை கோரப்பட்டது. மேலும், இம்முறை மன்ற நடுவ 25.11.2016 நாளிட்ட அழைப்பாணையின்படி முறையீட்டு மனுதாரர் 28.12.2016 அன்று நேரடி விசாரணைக்கு அழைக்கப்பட்டார். கடையநல்லூர் நகராட்சி ஆணையரது 05.12.2016 நாளிட்டட அறிக்கை வரப்பெற்று பரிசீலிக்கப்பட்டது. மேற்படி அறிக்கையில், புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள அக்குவா மினரல் குடிநீர் ஆலை சம்பந்தமாக பொது மக்களிடமிருந்து புகார்கள் வந்ததாலும், நகராட்சிப் பகுதியில் கடுமையான குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டதாலும் நகராட்சியின் செயல்முறைகள் ந.க.எண்:3215/2014/எச்1, நாள்:03.11.2016 ன் படி, மேற்படி குடிநீர் ஆலைக்கான உரிமம் ரத்து செய்யப்பட்டுள்ளதெனவும் மேற்படி ஆணையை எதிர்த்து குடிநீர் ஆலை உரிமையாளரால் சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் நீதிப்பேராணை (MD) 21936/2016 மற்றும் WMP (MD) எண் 15680/2016 ன் படியும் தடையாணை பெறப்பட்டுள்ளதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி தடையானையினை எதிர்த்து நகராட்சியின் சார்பில் வாக்காலத்து தாக்கல் செய்யப்பட்டுள்ளதெனவும் தடையாணையை நீக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. நீதி மன்ற தீர்ப்பின் அடிப்படையில் இறுதி நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி குடிநீர் ஆலைக்கு அரசு செயலாளர் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (ந.வ.4(1)) துறை கடிதம் நாள்:30.04.2013, தமிழ்நாடு அரசிதழில் 06.11.2013 நில வகைப்பாடு மாற்றம் சம்பந்தமான அறிவிப்பு வெளியீடு, நகர் ஊரமைப்புத் துறை துணை இயக்குநரது செயல்முறை ஆணை (நாள்:10.03.2014), நகராட்சியின் கட்டிட அனுமதி (05.08.2014), செயற்பொறியாளர் நீ.ஆ.அ/பொ.ப.து, சிற்றாறு வடிநில கோட்டம், தென்காசி (இ) குடியிருப்பு, குற்றாலம் அவர்களது 26.09.2012 நாளிட்ட சான்று, மாவட்ட அலுவலர் தீயணைப்பு-மீட்பு பணித்துறை, திருநெல்வேலி அவர்களது 18.03.2014 நாடிட்ட தடையின்மைச் சான்று, மாநில நீர்நிலை (ம) தரைமட்ட நீர் ஆராய்ச்சித் துறையின் 10.02.2014 நாளிட்ட கடிதம் தலைமைப் பொறியாளர், மாநில தரை மற்றும் மேற்பரப்பு நீர் வளங்கள் ஆராச்சி மையம் (சென்னை) அவர்களின் 10.02.2014 நாளிட்ட கடிதம், தலைமைப் பொறியாளர் பொது பணித் துறை மற்றும் நீர் வளங்கள் ஆராய்ச்சி துறை சென்னை 10.02.2014 நாளிட்ட கடிதம், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், திருசெல்வேலி அவர்களின் 08.04.2014 நாளிட்ட செயல்முறைகள் மற்றும் கடையநல்லூர் நகர்மன்ற தீர்மான எண்.81 நாள்:09.06.2015 ன் அடிப்படையிலும் அனுமதி வழங்கப்பட்டதென விவரிக்கப்பட்டுள்ளது. அரசின் விதிமுறைகள் முறையாக கடைப்பிடிக்கப்பட்டுள்ளதெனவும் கடையநல்லூர் ஆணையரின் 5.12.2016 தேதியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நகராட்சி ஆணையரது 03.11.2016 நாளிட்ட குடிநீர் ஆலை உரிம ரத்து தொடர்பான ஆணை, நீதிமன்ற வழக்கின் மனுதாரரான ஆலை உரிமைதாரருக்கு அறிவிப்பு வழங்கப்படாமல் இயற்கை நியதி கோட்பாடுகள் பின்பற்றப்படாமல் வெளியிடப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டி சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளை நீதி பேராணை (MD) no.21936/2016 ல் நீதி மன்ற இடைக்கால தடையாணை 16.11.2016 ல் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

முறையீட்டு மனுதாரர் 28.12.2016 அன்று விசாரணைக்கு ஆஜராகி, தனது மனுவின் மீது தென்காசி வருவாய் கோட்டாட்சியர் நடவடிக்கை எடுத்து மேற்படி குடிநீர் ஆலையை நிரந்தரமாக மூடுவதற்கு ஆணையிட்டதாகவும் 2013 ல் அப்பகுதியை பொது தொழிற்சாலைப் பகுதிகளாக மாற்றி அரசிதழில் வெளியிட்டுள்ளார்கள் எனவும் தெரிவித்துள்ளார். மேலும், இம்முறை மன்ற நடுவத்தில் தான் மனு செய்தஉடன் அந்த குடிநீர் ஆலை உரிமத்தை இரத்து செய்து நகராட்சி ஆணையர் ஆணை வெளியிட்டதாகவும், அறிவிப்பு இன்றி முறையற்ற வகையில் ஆணை போட்டு, தடையாணை பெறுவதற்கு நகராட்சி ஆணையர் காரணமாக இருந்துள்ளாரெனவும், இவ்வாறு செயல்பட ரூ.4/-லட்சம் கொடுத்ததாக ஆலை உரிமைதாரர் பேசிக்கொள்வதாகவும் முறையீட்டு மனுதாரர் தனது வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளார். நகராட்சி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர் வாதுரையின் நகல் நகராட்சி ஆணையரது 24.01.2017கடிதத்துடன் வரப்பெற்றது.

இந்நிலையில், முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ள கோரிக்கையான (i) அக்குவா குடிநீர் ஆலை உரிமம் இரத்து தொடர்பாக நீதி மன்ற வழக்கு நிலுவையிலுள்ளதால், 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டப் பிரிவு 10(3) (b)ன்படி நீதி மன்றம் முன்பு நிலுவையிலுள்ள இப்பொருட்பாடுகளில் இம்முறைமன்ற நடுவ விசாரணை பொருட்பாடு ஆகாது என்ற விவரம் இம்முறைமன்ற நடுவ அ.ம.எண் 1136/16/ந-1 நாள்:17.02.2017 அறிவிப்பாணை மூலம் முறையீட்டு மனுதாரருக்குத் தெரிவிக்கப்பட்டது. இருப்பினும் மனுதாரரது பிறிதொரு கோரிக்கையான நகராட்சி அலுவலங்கள் மீதான லஞ்ச ஊழல் புகார்கள் மீதான நடவடிக்கைகள் குறித்து இம்முறை மன்ற நடுவம் விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்ள முடிவெடுத்துள்ளது குறித்தும் மேற்படி இம்முறைமன்ற நடுவ ஆணையில் மனுதாரருக்கு தகவளிக்கப்பட்டுள்ளது.

மேலும், இப்பொருள் குறித்து 30.03.2017 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு கடையநல்லூர் நகராட்சி ஆணையர், நகராட்சி பொறியாளர், துப்புரவு ஆய்வாளர் மற்றும் மேலாளர் ஆகியோருக்கு இம்முறைமன்ற நடுவ அழைப்பாணை அ.ம.எண்:1136/16/ந-2 நாள்:17.02.2017 ன்படி ஆணையிடப்பட்டது. நகராட்சி ஆணையரது அறிக்கை ந.க.எண்:3215/2014/எச்.1 நாள்:16.02.2017ல் நீதிமன்ற தடையாணையினை நீக்கம் செய்திட, நகராட்சியால் சென்னை உயர் நீதி மன்ற மதுரைக் கிளையில் வாதுரை தாக்கல் செய்யப்பட்டு W.M.P S.R (MD) No.8430/2017 என எண்ணிடப்பட்டுள்ளதாக விவரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

30.03.2017 அன்று திரு.பா.சக்திவேல், துப்புரவு ஆய்வாளர், திரு.ஆ.வைரவநாதன், மேலாளர், திரு.O.A.சேக் அப்துல் காதர், நகரமைப்பு ஆய்வாளர் மற்றும் திரு.பி.ஆயுப்கான், நகராட்சி ஆணையர் ஆகியோர் 30.03.2017 அன்று விசாரணைக்கு நேரில் ஆஜராகி தங்களது தரப்பிலான வாக்குமூலத்தினையும், விளக்கங்களையும் சமர்ப்பித்தனர். மேற்படி அலுவலர்கள் தாங்கள் மனுதாரர் குறிப்பிட்டது போல் கையூட்டு ஏதும் பெறவில்லை எனவும் எவ்வித முறைகேடும் செய்யப்படவில்லை எனவும் உறுதி அளித்து வாக்குமூலங்களை தாக்கல் செய்துள்ளனர்.

மேலம், நகராட்சி ஆணையரது கூடுதல் அறிக்கை ந.க.எண்.3215/2014/எச்-1 நாள்:31.03.2017ல் கீழ்க்கண்டவாறான விவரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

"மனுதாரர் செல்வி.பாண்டியன் க/பெ. சீனிப்பாண்டியன் என்பவர் 75 HP குடிநீர் ஆலை துவங்குவதற்கு கட்டிடம் கட்ட 11.08.2010 ல் விண்ணப்பம் செய்துள்ளார். நகரமைப்பு ஆய்வாளர் மற்றும் துப்புரவு ஆய்வாளர் குறிப்புரையின்படி, விவசாய பகுதியினை தொழிற்சாலை பகுதியாக உரிய மாற்றம் செய்து அதன் பின்னர் திருநெல்வேலி நகர்ப்புற மற்றும் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகத்தில் தடையின்மை சான்று பெற்று விண்ணப்பிக்க அறிவுறுத்தப்பட்டதால், மேற்படி மனுதாரர் 2010 முதல் 2014 டிசம்பர் மாதம் வரை மேற்படி அலுவலக தடையின்மை சான்று பெற்று விண்ணப்பம் வழங்காத

காரணத்தால் மேற்படி குடிநீர் ஆலை இயங்க அனுமதி வழங்கவில்லை. அதன் பின்னர் மேற்கண்ட துறைகள் மூலம் தடையின்மை சான்று பெற்று வழங்கியதன் அடிப்படையில் 2014 டிசம்பர் மாதம் நகர் மன்ற ஒப்புதல் பெற்று குடிநீர் ஆலை இயங்குவதற்கு 15.06.2015 ல் உரிய அனுமதி உத்தரவு வழங்கப்பட்டது."

முறையீட்டு மனுதாதர் திரு.க.மருதையா என்பவர் இப்பொருட்பாடு தொடர்பாக மாண்பமை சென்னை உயர் நீதி மன்ற மதுரைக் கிளையில் தனியே வழக்கு/நீதிப்பேராணை (W.P(MD)எண்:4820/2017) தாக்கல் செய்துள்ள விவரம் நகராட்சி அலுவலக 30.03.2017 மின்னஞ்சல் மூலம் வரப்பெற்றுள்ளது. எனவே, 2014, ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டப் பிரிவு 10 (3) (b) ன் படி நீதி மன்றமொன்றின் முன்பு நிலுவையிலுள்ள இப்பொருட்பாட்டினைக் கருதி இம்முறைமன்ற நடுவ நடவடிக்கைகள் தற்போது கைவிடப்பட முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2017 ஆம் ஆண்டு மே திங்கள் 5 ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

/ஓம்/

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர் 11/5/17

11.5.17 11/5/17

பெறுநர்

1.திரு.க.மருதையா,
102, முல்லை நகர்,
சங்கரன் கோவில்,
திருநெல்வேலி மாவட்டம் - 627 756.

2.நகராட்சி ஆணையர்,
கடையநல்லூர் நகராட்சி,
மற்றும் பிறர்.

3.நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,
திருநெல்வேலி மண்டலம்.